# கணக்கீடு

## நிறைவில் பதிவு



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## பயிற்சிகள்

### மதிப்பீட்டு வினாக்கள்

1) 2017.01.01, 2017.12.31 ஆகிய திகதிகளில் இருந்தபடி வணிகமொன்றின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

| விபரம் | 2017.01.01 (ரூபா.) | 2017.12.31 (ரூபா.) |
|---|---|---|
| காசு | 1,000 | 2,500 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 6,250 | 4,750 |
| வியாபாரத் தொக்கு | 8,700 | 10,250 |
| தேறிய ஏட்டுப் பெறுமானத்தில் சாதனங்கள் | 4,000 | 3,500 |
| வியாபாரக் கடன்கொடுத்தார் | 6,500 | 7,050 |

ஆண்டுக்காலத்தில் அனைத்துக் கொள்வனவுகளும் தேய்மானத்துக்கான ஏற்பாடு நீங்கலாக அனைத்துச் செலவுகளும் காசாகவே தீர்க்கப்பட்டன. ஆண்டுக்காலத்தில் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற காசு ரூ. 40,000 ஆக இருந்த வேளையில், வியாபாரக் கடன்கொடுத்தோருக்குச் செலுத்தப்பட்ட பணம் ரூபா. 27,500 எனும் தொகையாக இருந்தது. ஆண்டுக்காலத்தில் வேறு பெறுவனவுகளோ கொடுப்பனவுகளோ இடம்பெறவில்லை.

2017ஆம் ஆண்டிற்குப் பின்வருவனவற்றைக் கணிக்கவும்

(அ) விற்பனைகள்

(ஆ) கொள்வனவுகள்

(இ) விற்பனையான பண்டங்களின் கிரயம்

(ஈ) தேறிய இலாபம்

02) நவ்சர் வணிகத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் வருமாறு

| விபரம் | 2017.01.01 (ரூபா.) | 2017.12.31 (ரூபா.) |
|---|---|---|
| ஆதனம் பொறியும் உபகரணமும் | 30,000 | 38,000 |
| இருப்புக்கள் | 12,000 | 16,000 |
| விற்பனைக் கடன்படுநர் | 8,000 | 15,000 |
| கடன்கொடுநர் | 14,000 | 18,000 |
| சில்லறைக் காசு மீதி | 6,000 | - |
| காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி | 4,000 | - |
| அட்டுறுச் செயற்பாட்டுச் செலவுகள் | 1,000 | 2,500 |

தொகுப்பு: திரு. ம.அசோக்குமார் (ஆசிரியர் - கணக்கீடு, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மேலதிக தகவல்கள் :

1) வருடத்தினுள் ரூ. 12,000 இற்கு இயந்திரமொன்று வணிகத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

2) வருடத்தின் மொத்தச் செலவுகள் அறிக்கைப்படுத்துவதற்குக் கொடுக்கப்பட்ட செலவுகள் ரூ. 17,500 ஆகும்.

3) வருடத்தினுள் உரிமையாளரால் வணிகத்திற்கு ரூபா. 6000 மேலதிக மூலதனமாக இடப்பட்டதுடன் சொந்தத்தேவை கருதி ரூ. 4,000 பற்றிக் கொண்டார்.

4) வருடத்தினுள் கடன்பட்டோரிடமிருந்து ரூ. 95,100 கிடைக்கப்பெற்றதுடன் கடன்கொடுத்தோருக்கு ரூ.70,600 செலுத்தப்பட்டது.

5) வருடத்தினுள் கொடுத்த கழிவாக ரூ.6,000 உம் பெற்ற கழிவாக ரூ. 1,600 உம் காணப்பட்டதுடன் ரூ. 900 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்பட்டது.

6) உரிமையாளர் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூ.6,000 ஐ சில்லறைக் காசாக வைத்துக் கொண்டு மீதியை வங்கியில் இடுகிறார்.

7) வணிகத்தின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் காசோலை மூலம் மாத்திரமே நடைபெறுகிறது.

**வேண்டப்படுவது:**

31.12.2017இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கினையும் அத்திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்றினையும் தயாரிக்குக.

03) அ) நிறைவில்ப் பதிவுமுறைமை ஒன்றின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது என்ன?. அதன் பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) திரு. பெர்னாண்டோ பலசரக்குக் கடையொன்றை நடத்துகிறார். ஆனால் ஒரு முறையான கணக்குப் புத்தகத் தொகுதியைப் பேணவில்லை. எனினும் நடைமுறையிலுள்ள அவரது புத்தகங்களை பகுப்பாய்வு செய்யும் போது அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும் 2017 ஆரம்பத்திலும் முடிவிலும் பின்வருமாறு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

| விபரம் | 2017.01.01 இல் (ரூபா.) | 2017.12.31 இல் (ரூபா.) |
|---|---|---|
| கட்டிடங்கள் (கிரயத்தில்) | 270,000 | 270,000 |
| தளபாடம் (கிரயத்தில்) | 93,000 | 93,000 |
| இருப்பு | 127,500 | 117,900 |
| சில்லறைக் கடன்பட்டோர் | 36,450 | 64,350 |
| சில்லறைக் கடன்கொடுத்தோர் | 74,850 | 68,550 |
| காசுக் கையிருப்பு | 69,900 | 78,300 |

தொகுப்பு: திரு. ம.அசோக்குமார் (ஆசிரியர் - கணக்கீடு, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

வியாபாரத்தில் பேணப்பட்ட தற்காலிகக் குறிப்பு புத்தகத்தில் உள்ளவற்றுக்கிணங்க ஆண்டுக்குரிய காசுக் கொடுப்பனவுகளும் பெறுவனவுகளும் கீழ்வருமாறு :

| விபரம் | (ரூபா.) |
|---|---|
| கூலிகள் | 90,300 |
| கடன்பட்டோரிடமிருந்து காசுப் பெறுவனவு | 1,219,500 |
| சில்லறைச் செலவுகள் | 31,500 |
| கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்ட காசு | 965,100 |
| அச்சிடலும் எழுதுபொருட்களும் | 17,100 |
| வாடகையும் இறையும் | 36,000 |
| தொலைபேசிக் கட்டணம் | 21,600 |
| மின்கட்டணம் | 10,350 |

ஆண்டில் ஏதேனும் காசுக் குறைபாடு காணப்படின் அவை திரு. பெர்னாண்டோவின் எடுப்பகவுகள் எனக் கருதப்பட வேண்டும். திரு. பெர்னாண்டோ தனது சொந்தத் தேவைக்காக ரூ. 10,800 கிரயமான பொருட்களை வியாபாரத்திலிருந்து திரும்ப எடுத்துள்ளார்.

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

1) 2017.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டக்கூற்று.

2) 2017.12.31 ஆம் திகதி இருந்தபடி நிதிநிலைமைக்கூற்று?

04) திரு. ரூபன் 2017 ஜனவரி 1ஆம் திகதியன்று சில்லறை வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். இவர் உரிய கணக்கேடுகளைப் பேணிவரவில்லை. 2017ஆம் ஆண்டிற்கான வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு:-

1) ரூபன் ஜனவரி 01இல் ரூ. 200,000 காசினையும், ரூ.100,000 பெறுமதியுடைய மோட்டார் வாகனத்தையும் மூலதனமாக ஈடுபடுத்தினார்.

2) எடுப்பனவுகளுக்கு, பதிவு எதுவும் செய்யப்படவில்லை. இவ் வருடம் காசுப் பற்றுக்களுக்கு மேல-திகமாக ரூபனுடைய வருமானவரிக்காக ரூ. 10,000 காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

3) ரூ. 40,000இற்கு தளபாடம் கொள்வனவு செய்தார். வணிகத்தின் நிலையான சொத்துக்கள் அனைத்தும் குன்றும் நிலுவை முறைக்கமைய 10% தேய்மானம் செய்யப்படும்.

4) 2017 யூலை 01இல் ஆண்டொன்றுக்கு 24% படி ரூ. 200,000 வங்கிக்கடன் பெற்றுக் கொள்ளப்பட்டது.

5) 31.12.2017இல் இருப்புக் கிரயத்தில் ரூ.84,000 ஆக மதிப்பிடப்பட்டது.

6) விற்பனைகள் கடன் அடிப்படையில் செய்யப்பட்டது. 2017 டிசம்பர் 31இல் விற்பனைகள் மீது ரூ.128,000 சேகரிக்கப்படவேண்டி இருந்தது.

07) ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோருக்கு ரூ.96,000 செலுத்தப்படவேண்டி இருந்தது. இந் நிதியாண்டில் வணிகத்தின் மொத்த கொள்வனவுகள் ரூ. 330,000 ஆகும். காசுக் கொள்வனவுகள் எவையும் இடம்பெறவில்லை.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

8) 2017 டிசம்பர் 31இல் இருந்தவாறு காசு மீதி 144,000 ஆகும்.

9) சமர்ப்பிக்கப்படாதிருந்த காசோலைகளும் தேறாத காசோலைகளும் 2017 டிசம்பர் 31இல் முறையே ரூ.7000, ரூ.12,000 ஆகும்.

10) விற்பனைகள் அவ்விற்பனைகள் மீது 40% இலாப எல்லையுடன் நிர்ணயிக்கப்பட்டதாகும். இருப்பு மிகைகளோ அல்லது குறைகளோ இருக்கவில்லை.

11) நிதியாண்டில் பின்வரும் செலவுகள் மேற்கொள்ளப்பட்டன.

| விபரம் | காசு (ரூபா) | காசோலை (ரூபா) |
|---|---|---|
| சம்பளங்கள் | 3,000 | 32,000 |
| வாடகை | - | 12,000 |
| மின்சாரம் | - | 8,200 |
| தொலைபேசி | - | 6,000 |
| பழுதுபார்த்தல் | 2,500 | 6,200 |

பின்வருவனவற்றைத் தயாரிக்கவும் :

1) திரு. ரூபனின் 2017 டிசம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டக்கூற்று.

2) 2017 டிசம்பரில் 31இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று.

05) திரு. ஜெயரட்ண என்பவர் உயர்தர விளையாட்டுப் பொருட்களை விற்கும் கடையொன்றை நடாத்தி வருகின்றார். தான் விற்கும் ஒவ்வொரு பொருளினதும் கிரயத்தின் மீது 25% மொத்த இலாபத்தைச் சம்பாதிக்கின்றார். அவர் காசேட்டை வைத்திருக்கவில்லை. 2017 ஜனவரி 01ஆம் திகதியன்று அவரது வணிகத்தின் கணக்குகள் பின்வருமாறு இருந்தது.

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| தேறிய நிலையான சொத்துக்கள் | | 200,000 |
| தொக்கு | 100,000 | |
| காசு மீதி | 32,000 | |
| | 132,000 | |
| கழி :- | | |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | (12,000) | 120,000 |
| உரிமையாளர் மூலதனம் | | 320,000 |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2017 டிசம்பர் 31 வரையுள்ள ஆண்டிலே,

அ) கடனுக்கு விற்பனை எவையும் இருக்கவில்லை.

ஆ) பெறுவனவுகளில் ரூ.4,175,000 ஆன தொகை வங்கியில் இடப்பட்டது.

இ) குறித்த காலப்பகுதிக்கான வங்கிக் கூற்றுக்கள் பின்வரும் கொடுப்பனவுகளைக் காட்டுகின்றன.

| | | |
|---|---|---|
| (i) | வியாபாரக் கடன்கொடுத்தோர் ……………………………………… | ரூ.360,000 |
| (ii) | நானாவித செலவுகள் ……………………………………………… | ரூ. 56,000 |
| (iii) | எடுப்பனவுகள் …………………………………………………………… | ரூ. 44,000 |

2017 டிசம்பர் 31இல் கடன்கொடுத்தோர் ரூ. 14,000 காணப்பட்டது. அத்துடன் வங்கியிலிருந்த காசு மீதி அறியப்படாததுடன் இறுதி இருப்பின் பெறுமானமும் கணிக்கப்படவில்லை. அட்டுறு தொகைகளோ, முற்பணக் கொடுப்பனவுகளோ இடம்பெறவில்லை. ஆண்டுக் காலத்தில் நிலையான சொத்துக்கள் மேலும் கொள்வனவு செய்யப்படவில்லை. ஆண்டுக்கான பெறுமானத்தேய்வு ரூ.9,000 ஆகும்.

**பின்வருவனவற்றை தயாரிக்குமாறு நீர் கேட்கப்படுகின்றீர்.**

(1) காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு

(2) 31.12.2017இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டக்கூற்று

(3) 31.12.2017 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

06) 2017.12.31இல் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக நிரஞ்சன் வியாபாரத்தில் கணக்குப் புத்தகங்கள் அழிவடைந்தன. எவ்வாறாயினும் நிரஞ்சன் இறைவரித் திணைக்களத்திலிருந்த வரிக்கோவையிலிருந்து 2016.12.31இல் உள்ளபடியான பிரித்தெடுக்கப்பட்ட நிதிநிலைமைக்கூற்றை எடுக்கக்கூடியதாக இருந்தார்.

மேலதிக தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(1) கட்டடங்களுக்கு வருடாந்தம் 10% பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றது. காணி கட்டடங்களின்

| | | ரூபா | | | ரூபா |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | 200,000 | **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | |
| நிறுத்தி வைத்த இலாபம் | | 62,100 | காணியும் கட்டடங்களும் | | 260,000 |
| | | 262,100 | | | |
| 10% நீண்ட காலக்கடன் | | 30,000 | **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | இருப்புக்கள் | 18,800 | |
| கடன் கொடுத்தோர் | 11,000 | | கடன்பட்டோர் | 16,200 | |
| சென்மதிக் கடன்வட்டி | 1,500 | 12,500 | காசு | 9,600 | 44,600 |
| | | 304,600 | | | 304,600 |

பெறுமதியினுள் கட்டத்தின் கிரயம் ரூ. 100,000 உள்ளடங்கியுள்ளது.

(2) வங்கிக்கூற்றின் வெளிப்படுத்தலின்படி இக்கணக்காண்டுக் காலத்தில் கடன்பட்டோர்களிடமிருந்து ரூ.178,000 தொகையான காசோலைகள் பெறப்பட்டன. வியாபாரத்தின் எல்லாக் கொடுப்பனவுகளும் வங்கிக்கணக்கினூடாகச் செய்யப்பட்டது. பின்வரும் கொடுப்பனவுகள் இக்கணக்காண்டு காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டவையாகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| விபரம் | ரூபா |
|---|---|
| கூலிகள் | 36,000 |
| மோட்டார் வாகன வாடகை | 4,000 |
| கடன்வட்டி | 3,000 |
| பொதுச் செலவுகள் | 3,000 |
| கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு | 45,250 |

(3) கடன்வட்டி வருடத்திற்கு இருமுறையாக யூன் 30இலும் டிசம்பர் 31இலும் செலுத்தப்படல் வேண்டும். செலுத்தப்பட்ட கடன் வட்டியினுள் 2016 டிசெம்பர் 31இல் சென்மதியாக இருந்த வட்டிக்காகச் செலுத்திய கொடுப்பனவும் உள்ளடங்கியுள்ளது. 2017 டிசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கடன் வட்டியானது 2018 ஜனவரி 10இல் செலுத்தப்பட்டது.

(4) 2017.12.31 இல் உள்ளபடியான ஏனைய மீதிகள்

| விபரம் | ரூபா |
|---|---|
| கடன் கொடுத்தோர் | 2,500 |
| கடன்பட்டோர் | 17,500 |
| இருப்புக்கள் | 16,000 |

**தேவைப்படுவது:-**

1) 2017.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக்கூற்று
2) 2017.12.31இல் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று.

07) திரு. வில்சன் விஜயசிங்கம் 01 யூலை 2016இல் ரூ.1,500,000 முதலிட்டு வியாபாரம் ஒன்றைத் தொடங்கினார். இவரினால் இவ் வியாபாரத்திற்கு முறையாகக் கணக்கு புத்தகங்கள் பேணப்படவில்லை. எனினும் 31 மார்ச் 2017இல் முடிவரடயும் ஒன்பது மாதத்திற்கான பின்வரும் தகவல்களைப் பெற்றககூடியதாகவுள்ளது.

(i) 31 மார்ச் 2017 இலுள்ளவாறு இனங்காணப்பட்டுள்ள சில சொத்துக்கள், பொறுப்புக்கள்.

| விபரம் | ரூபா |
|---|---|
| பௌதிக இருப்புக் கணக்கெடுப்புப்படி இருப்புப் பெறுமதி | 150,000 |
| ஆதனம், பொறி, உபகரணம் (கிரயத்தில்) | 1,400,000 |
| கடன்கொடுத்தோர் | 150,000 |
| கடன்பட்டோர் | 100,000 |
| சென்மதியான மின்சாரக் கட்டணங்கள் | 4,000 |
| வங்கிக்கடன்கள் | 350,000 |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

(ii) விற்பனையானது விற்பனை விலையின் 50% மொத்த இலாபத்தில் செய்யப்படுகின்றது.

(iii) விற்பனைகள், கொள்வனவுகள் என்பன 15% பெறுமதி சேர்த்த வரி (VAT)இற்கு உட்பட்டவை.

(iv) 31.03.2017இல் முடிவடைந்த 09 மாதங்களிற்கான ஏனைய விபரங்கள் வருமாறு

- பெறுமதி சேர்த்த வரிக்கோப்பிலிருந்து பெற்ற விபரங்கள் ரூபா
  (1) விற்பனைகள்.................................................................. 1,200,000
  (2) கொள்வனவுகள்............................................................. 800,000
  (3) செலுத்திய பெறுமதி சேர்த்த வரி....................................... 45,000
- களஞ்சியத்துள் நீர் புகுந்ததால் இருப்புக்களின் ஒரு பகுதி அழிந்துள்ளது.
- நடைமுறையல்லாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் வருடத்தில் பெறுமானத் தேய்வு விதிப்பதில்லை.
- 01 ஜனவரி 2017இல் ரூபா. 500,000 வங்கிக்கடன் வருடாந்த வட்டி 20% இல் பெறப்பட்டது.
- காசு மூலம் செலுத்திய செயற்பாட்டுச் செலவுகள்.............................ரூ. 436,000
- காசு மூலம் செலுத்திய வங்கிக்கடன் வட்டி ...................................... ரூ. 10,000

**தேவைப்படுவது:**

1) 31.03.2017இல் முடிவடைந்த 09 மாதங்களிற்கான காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு
2) 31.30.2017இல் முடிவடையும் 09 மாதங்களிற்கான இலாபம் அல்லது நட்டக்கூற்று
3) 31.03.2017இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று

08) லக்சிகா ஒரு மின் உபகரண கடையொன்றின் உரிமையாளராவார். இவர் இரட்டைப்பதிவு முறைமையின் படி கணக்குகளை ஒழுங்குமுறையாகப் பேணி வருவதில்லை. 2017.12.31இல் முடிவடைந்த வருடத்திற்கான பின்வரும் தகவல்கள் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

(1) இவ்வியாபாரத்தின் இவ்வாண்டுக்கான காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| 2017.01.01இல் உள்ளபடியான மீதி | 17,000 | வாடகை | 58,000 |
| வைப்பு | 585,400 | இறைகள் | 20,400 |
| | | மின்சாரம் | 9,800 |
| | | சில்லறைச் செலவுகள் | 5,600 |
| | | கடன்கொடுத்தோருக்கு செலுத்திய காசு | 388,000 |
| | | மீதி 2017.12.31 | 120,600 |
| | 602,400 | | 602,400 |

(2) எல்லா விற்பனைகளும், கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் இடம்பெற்றதாகும்.

தொகுப்பு: திரு. ம.அசோக்குமார் (ஆசிரியர் - கணக்கீடு, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

(3) கடன்பட்டோரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லாக்காசும் பின்வரும் கொடுப்பனவுகளை மேற்கொண்ட பின்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது.

(அ) வாராந்த பற்றுக்கள் ரூ. 1,000 (ஒரு வருடத்தில் 52 வாரங்கள் கொள்க)

(ஆ) உதவியாளர் கூலிகள் ரூ. 88,400

சில்லறைச் செலவுகள் ரூ. 21,000

(4) பின்வரும் மேலதிக தகவல்களும் கிடைப்பனவாக உள்ளன.

| விபரம் | 2017.01.01 "ரூ." | 2017.12.31 "ரூ" |
|---|---|---|
| இருப்பு | 36,000 | 52,000 |
| கடன்பட்டோர் | 10,600 | 17,600 |
| கடன்கொடுத்தோர் | 27,600 | 38,680 |

**வேண்டப்படுவது :-**

2017.12.31இல் முடிவடைந்த வருடத்திற்கான வியாபாரத்தின் இலாபம் அல்லது நட்டக்கூற்று

09) பின்வரும் தகவல்கள் யதுர்சன் வியாபாரத்தின் கணக்குப் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

i) சில சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் மீதிகள்

| விபரம் | 2018.03.31 இல் | 2017.03.31 இல் |
|---|---|---|
| முன்செலுத்திய செலவுகள் | 36,000 | 52,000 |
| சென்மதி செலவுகள் | 10,600 | 17,600 |
| இருப்புக்கள் | 27,600 | 38,680 |
| தளபாடம் (குறைத்து எழுதிய பெறுமதியில்) | 164,000 | 140,000 |
| கடன்கொடுத்தோர் | 520,000 | 440,000 |

ii) 31.03.2018 இல் முடிவடைந்த கணக்காண்டு வருடத்திற்கான காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும்

கடன்பெற்றோரிடமிருந்து பெறப்பட்டது. (2.5% கழிவினைக் கழித்த பின்) - 975,000

2017.10.01இல் தளபாடக் கொள்வனவுக்கான கொடுப்பனவு - 40,000

செலவுகள் ………………………………………………………………………. - 150,000

கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவு (2% கழிவினைக் கழித்த பின்) - 588,000

iii) மொத்த இலாபப் பங்கு விற்பனையில் 20%

iv) எல்லா விற்பனைகளும் கொள்வனவுகளும் கடனுக்கு மேற்கொள்ளப்பட்டன.

v) உரிமையாளரால் ரூ. 10,000 பெறுமதியான பொருட்கள் இவரின் சொந்தப் பாவனைக்காக இருப்பிலிருந்து எடுக்கப்பட்டன.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**வேண்டப்படுவது :-**

யதுர்சன் விபாரத்தின் 2018 மார்ச் 31இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்றினை தயாரிக்குக.

10) 2017 ஏப்பிரல் 01ஆம் திகதியன்று யஸ்ரின் என்பவர் ரூ.400,000 ஐ காசாக செலுத்தி பிரதீப் என்பவரிடமிருந்து நிறுவனம் ஒன்றை கொள்வனவு செய்தார். ரூ.140,000 பெறுமதியுடைய தொக்குகளையும் உருவச் சொத்துக்களாப் பெற்றார். 2018 மார்ச் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டின் போதான காசு நடவடிக்கையின் பொழிப்பு வருமாறு.

| | ரூபா | | ரூபா |
|---|---|---|---|
| 2017.04.01 வங்கியில் இருந்த வைப்பு | 30,000 | கொள்வனவுகள் | 930,000 |
| **பெறுவனவுகள்** | | நிர்வாகச் செலவு | 35,000 |
| காசு விற்பனை | 500,000 | விநியோகச் செலவுகள் | 65,000 |
| வாடிக்கையாளர் | 600,000 | எடுப்பனவுகள் | 30,000 |
| | | 2018.03.31இல் வங்கியில் உள்ள காசு | 70,000 |
| | 1,130,000 | | 1,130,000 |

**மேலதிக தகவல்கள் :-**

i) ஆண்டுக்கான புரள்வு (விற்பனை) ரூ.1,200,000

ii) மொத்த சதவீத இலாபமானது விற்பனையில் 20%

iii) ஆண்டுக்கான உருவச் சொத்துக்கள் மீது ஆண்டு ஆரம்ப மீதிக்கு கிரயத்தில் 10% படி செய்ய வேண்டும்.

iv) ஆண்டின்போது சொந்த உபயோகத்திற்கு என எடுக்கப்பட்ட பொருட்களின் கிரயம் ரூ.15,000.

**தயாரிக்குக :**

1) 31.03.2018இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது .நட்டக்கூற்று.

2) அத்திகதியில் உள்ளபடியான நிதிநிலைமைக்கூற்று.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

11) 2017 மே 01இல் ஜெனி வாணஸ் என்ற சில்லறை வியாபாரி பின்வரும் மீதிகளை தனது புத்தகத்தில் கொண்டிருந்தார். கட்டடம் ரூ.70,000 , உபகரணம் ரூ.8,200, வாகனம் ரூ. 5,100, கையிருப்பு ரூ. 9,500, வியாபாரக் கடன் கொடுத்தோர் ரூ.150. ஜெனி வாணஸ் புத்தகங்களை பேணுவதில்லை. ஆனால் 01 மே 2017 தொடக்கம் 30 ஏப்ரல் 2018 வரையான 12 மாத வங்கிக்கூற்று கிடைக்கப்பெற்று அவை சுருக்கப்பட்டு தரப்படுகிறது.

| விபரம் | ரூபா. |
|---|---|
| **வங்கியில் இட்ட காசு:-** | |
| மேலதிக மூலதனம் | 80,000 |
| கடன் எடுத்தல்கள் | 96,500 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்றது. | 1,400 |
| **காசோலை மூலம் கொடுப்பனவு :-** | |
| கையிருப்புக் கொடுப்பனவுக்கான கொடுப்பனவு | 70,500 |
| விநியோக வான் கொள்வனவு | 6,200 |
| வான் ஓடும் செலவு | 1,020 |
| வெளிச்சமும் வெப்பமும் | 940 |
| விற்பனை உதவியாளர் கூலி | 5,260 |
| ஏனைய செலவுகள் | 962 |

30 ஏப்பிரல் 2018இல் முடிவடைந்த ஆண்டுக்குரிய கடன் எடுத்தல்கள் அனைத்தும் கீழ் உள்ளவை தவிர வங்கியில் இடப்பட்டுள்ளது.

i) ஏனைய செலவு ரூபா. 408

ii) மாதாந்தப் பற்று ரூபா. 500

30 ஏப்பிரல் 2018இல் கடன்கொடுத்தோருக்கு கொடுக்க வேண்டியது ரூ.7,600. வியாபாரக் கடன்பட்டோரிடம் இருந்து பெறப்பட வேண்டிய அனைத்தும் அறவிடமுடியாக் கடனாகக் கொள்க. இவ்வருடத்தில் கடன் விற்பனை எதுவும் நடைபெறவில்லை.

கையிருப்பு …………… ரூ. 13,620

வருடத்திற்குரிய பெறுமானத் தேய்வு :- உபகரணம் ரூ. 720

வாகனம் ரூ. 1000

**வேண்டப்படுவது:**

1) 30 ஏப்பிரல் 2018இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டக்கூற்று. (அனைத்து செய்கைகளும் தனித்தனியாகக் காட்டப்படல் வேண்டும்)

தொகுப்பு: திரு. ம.அசோக்குமார் (ஆசிரியர் - கணக்கீடு, யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கணினி வடிவமைப்பு: திரு. இ.சிவச்செல்வன் (ஆசிரியர் - தகவல் தொ. தொழிநுட்பம், யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk